**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**ஆசிரியர் பட்டயப் பயிற்சி**

## *தாள் –1 தமிழ் மொழி கற்றல் கற்பித்தல்*

**முதல் பருவம்**

**நேரடி எழுத்துத்தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி – 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. "கலைத்திட்டம் என்பது கற்பிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பாடப்பொருள்களின் அளவு" என்ற கருத்தைக் கூறியவர் யார்?
2. வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண நூல் எது?
3. "பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்" என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது?
4. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்கள் எத்தனை?
5. அடிப்படை திறன்களில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
6. பேசுதல் மற்றும் எழுதுதல் திறன்கள் எதனை அடிப்படையாகக் கொண்டது?
7. ஓர் உயிரியின் வளர்ச்சி என்றால் என்ன?
8. கேட்டல் திறனின் பயன்களில் இரண்டினைக் கூறுக.
9. படித்தல் திறன் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. மாண்டிசோரி கல்வி முறையின் கொள்கைகளில் ஏதேனும் ஒன்றைக் கூறுக.
11. நுண்ணிலைக் கற்பித்தல் என்றால் என்ன?
12. உற்று நோக்கல் என்றால் என்ன?

13. பாடம் கற்பித்தல் திட்டத்தில் ஹெர்பார்ட் வடிவமைத்த படிநிலைகளில் இரண்டினைக் கூறுக
14. தொடக்க நிலை வகுப்புகளுக்கு ஏற்புடைய கற்பித்தல் முறை எது?
15. தேர்வு வினாக்களின் வகைகள் யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. மனித வளர்ச்சியின் படிநிலைகள் யாவை?
2. வளர்ச்சி மற்றும் மேம்பாடு இவற்றிற்கான வேறுபாடுகள் குறித்து எழுதுக.
3. புருணரின் கற்பித்தல் கொள்கைக்கான கூறுகளைப் பற்றி எழுதுக.
4. உள்ளடக்கிய கல்வியின் பயன்கள் யாவை?
5. மொழிபெயர்ப்பு என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.
6. படைப்பாற்றல் திறனை வளர்ப்பதற்குரிய வழிமுறைகள் குறித்து எழுதுக.
7. வினாத்தாள் தயாரிக்கும்போது மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் யாவை?
8. தேர்வு வினாக்களின் இன்றியமையா பண்புகளில் ஒன்றான ஏற்புடைமை பற்றி சிறு குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ் மொழி பன்முக வளர்ச்சி உடையது என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) வகுப்பறையில் மொழியைக் கற்பித்தலுக்கான அவசியத்தையும், அதன் நோக்கங்களையும் பற்றி விரிவாக விளக்குக.

2. (அ) மொழி கற்பித்தலில் உளவியல் கோட்பாடுகள் குறித்து விரிவாக கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) அடிப்படைத் திறன்களில் ஏதேனும் இரண்டினைப் பற்றி விரிவாக விளக்குக.

3. (அ) கற்பித்தல் திட்டம் தயாரிக்கும் முறை குறித்து விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) தேர்வு முறைகளையும் அதன் வகைகளையும் பற்றி விரிவாக எடுத்துரைக்க.